1987 ஏப்ரல் 9]

கம்பி போன்ற சாதனங்கள் கிடைக்காத காரணத்தால் பணி தாமதப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவைகளை விரைவாக முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே சிமெண்டுக்கும், இரும்புக்கும் எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. நிறையக் கிடைக்கிறது. வேறு ஏதாவது காரணங் கள் இருக்கும். அதை அறிந்து அதை நீக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

காப்டிவ் பவர் பிளான்ட் அமைத்தல்.

350—(* வினா எண் 12107) திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிப்காட் நிறுவனம் அகில உலக அளவில் டெண்டர் மூலம் Captive Power Plants அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் உள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தால் அகில உலக அளவில் டெண்டர் மூலம் கோரப்பட்ட அந்த கேப்டிவ் பவர் பிளான்ட்ஸ்க்கு ஆகக்கூடிய வெளிநாட்டுச் செலாவணியினுடைய அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன். இதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டிற்கான காலதாமதத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஹோசூரிலும், கும்மிடிபூண்டியிலும் ஜெனரேட்டர்களை வைப்பதற்காக இந்தத் திட்டம் போடப்பட்டது. ரூ. 14.44 கோடி செலவில் ஐந்து மெகாவாட் உற்பத்தி செய்யும் நான்கு ஜெனரேட்டர்களை நிறுவி அதன் மூலம் இருபது மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது. உலக

மார்க்கெட்டில் இதற்கான டெண்டர்கள் கோரப்பட்டபொழுது மிஷோஹிவாய் கம்பெனி, தாம் குறைந்த விலைக்குத் தருவதாக முன் வந்திருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. அது விரைவிலே முடிவு செய்யப்படும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, அந்த ஜென ரேட்டார்களைப் பொறுத்தவரையில் Technical Evaluation Committee போடப்பட்டிருக்கிறதா? அதனுடைய அறிக்கை என்ன சொல்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, சிப்காட் நிறுவனத்தில் இருக்கிற பொறியாளர்கள் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

வடஆற்காடு மாவட்டம் போளூரில் காகித தொழிற்சாலை.

351—(*வினா எண் 12510) திரு. ஜெ. ராஜாபாபு : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம் போளூரில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் போளூரில் காகிதத் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. எஸ். பி. மணவாளன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் வேறு எங்காவது காகிதத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா? வடாற்காடு மாவட்டத்தில் 3 சர்க்கரை ஆலைகளும், வடாற்காடு மாவட்டத்திற்கு அருகில் இரண்டு சர்க்கரை ஆலைகளும் ஆக மொத்தம் 5 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே, இனிமேலாவது வடாற்காடு மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.